**சாதனைச் செம்மல்**

2001



ஈரோடு தமிழ்ச் சங்கப் பேரவையின் சார்பில் த.ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு ‘சாதனைச் செம்மல்’ விருது வழங்கப்பட்டது.

09.12.2001 ஆம் தேதி ஈரோடு தமிழ்ச் சங்கப் பேரவையின் ஆண்டு விழா நிகழ்வில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறைத் தலைவர் முனைவர் புலவர் செ.இராசு அவர்கள் இவ்விருதை வழங்கினார். வள்ளலார் இயக்க முன்னோடிகளில் ஒருவரான மருத்துவர் எம்.சி.இராசமாணிக்கம் அவர்கள் இந்நிகழ்விற்குத் தலைமை வகித்துப் பாராட்டுரை வழங்கினார். ஈரோடு தமிழ்ச்சங்கப் பேரவையின் தலைவர் கவிமாமணி சேலம் பாலன், கவிஞர் மழைமகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கை ‘விடுதலை வேள்வியில் தமிழகம்’ என்ற ஆய்வு நூலின் மூலம் வெளிக்கொண்டு வந்ததற்காகவும், நாடெங்கும் நற்றமிழ்ச்

சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருவதைக் கருதியும், ஏராளமான இலக்கியக் கூட்டங்களை மக்கள் சிந்தனைப் பேரவையின் மூலம் வெற்றிகரமாக நடத்தி வருவதை வைத்தும் இன்னும் இதுபோன்ற இவரது பல நற்பணிகளைக் கணக்கிலெடுத்தும் இவ்விருது வழங்கப்படுவதாக விழா மேடையில் தமிழ்ச் சங்கப் பேரவை நிர்வகிகளால் அறிவிக்கப்பட்டது .

